IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 144/2022 |
| | | P/W's | : | PW1 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | மகேஸ்வரன் | CASTE | : | |
| S/O | ராஜா | RELIGION | : | இந்து |
| VILLAGE | கட்சிராயிருப்பு | CALLING | : | |
| TALUK | வாடிப்பட்டி | AGE | : | 48 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 01.09.2025**

**குறுக்கு விசாரணை**

1. நான் 10வது வகுப்பு வரை படித்திருக்கிறேன். தமிழ்நாடு மின்சார வாரியத்தில் வயர்மேனாக வேலை பார்க்கிறேன். நான் தற்போது மதுரையில் வசிக்கிறேன் என்றால் சரிதான். வழக்குச்சொத்து எனது தாயார் வழியின் பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வழக்குச்சொத்தும் மேலும் பல சொத்துக்களும் ஆதியில் முத்துச்சாமி தேவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி முத்துச்சாமித்தேவருக்கு சின்னகருப்பத்தேவர், பெரியகருப்பத்தேவர், கருப்பத்தேவர் என்று மூன்றுபேர் வாரிசுகள் என்றால் சரிதான்.

2. நான் மேற்படி பெரியகருப்பத்தேவர் வாரிசு என்றால் சரிதான். பிரதிவாதி சின்னகருப்பத்தேவர் வாரிசு என்றால் சரிதான். எனது வழக்குப்படி வழக்குச்சொத்தானது முத்துச்சாமித்தேவரின் வாரிசுகளுக்குள் வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்யப்பட்டு அதன்படி வழக்குச்சொத்து எனது தாயாருக்கு கிடைக்கப்பெற்றது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேலக்கால்உட்கடை பொட்டல்பட்டி கிராமம் சர்வே எண் 97/1ல் நடுமையம் 3 ஏக்கர், சர்வே எண் 86/2 ல் 60 செண்டு, சர்வே எண் 84/1ல் 81 செண்டு, சர்வே எண் 84/2ல் 30 செண்டு, சர்வே எண் 90/5ல் 36 செண்டு, சர்வே எண் 97/2ல் 15 செண்டு, சர்வே எண் 85ல் 69 செண்டு ஆகிய மொத்தச்சொத்துக்களை பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சர்வே எண்கள் சரிதான், சொத்துக்களின் மொத்த விஸ்தீரணம் குறைவாகத்தான் பிரித்துக்கொண்டார்கள்.

3. சர்வே எண் 97/1ல் நடுமையம் 3 ஏக்கர் உள்ள நிலத்தில் மேற்குப்புரம் கிணறு உள்ளது என்றால் சரிதான். மேற்படி கிணற்றை பொதுவாக வைத்துக்கொண்டு மற்றச் சொத்துக்களை பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான், கிணற்றை 3 வாரிசுகளுக்கும் பொதுவாக வைத்துக்கொண்டார்கள். மேற்படி கிணற்றை வைத்துதான் முத்துச்சாமி தேவரின் மொத்தச்சொத்துக்களுக்கும் தற்போது வரை பாசனம் செய்கிறார்கள் என்றால் சரிதான்.

4. மேற்படி வாய்க்கரால் பாகப்பிரிவினையின்படி மற்றவர்களின் பாகச்சொத்துக்களின் ஆவணங்களை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பொதுக்கிணற்றின் கிழக்கே உள்ள முதல் பாகம் கருப்பத்தேவருக்கும், அதற்கு கிழக்கே 2வது பாகம் பெரியகருப்பத்தேவருக்கும், அதற்கு கிழக்கே 3ம் பாகம் சின்னக்கருப்பத்தேவருக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பாகச்சொத்துக்களுக்கு வடக்குப்புரம் வாய்க்கால் வழியாக தற்போது வரை நீர்ப்பாசனம் செய்யபடுகிறது என்றால் சரியல்ல, அது எங்கள் சொந்த பயன்பாட்டிற்காக போடப்பட்ட வாய்க்கால்.

5. வழக்குச்சொத்திலும் பிரதிவாதி பாகச்சொத்திலும் தென்னங்கன்றுகள் உள்ளன என்றால் சரிதான். முத்துச்சாமி தேவர் காலத்திலிருந்து தற்போது வரை மொத்தச்சொத்துக்களுக்கு வடபுரம் உள்ள வாய்க்கால் வழியாகத்தான் நீர்ப்பாசனம் செய்யப்படுகிறது என்றால் சரியல்ல, எனது சொத்திற்கு நான் தனியாக கிணறு வெட்டிக்கொண்டேன், மற்றச்சொத்துக்களுக்கு மோட்டார் வைத்து நீர்ப்பாசனம் செய்கிறார்கள். என்னுடைய தாத்தா பெரியகருப்பத்தேவரும், கருப்பத்தேவரும் சேர்ந்து பிரதிவாதியின் தாத்தாவான சின்னகருப்பத்தேவருக்கு கடந்த 17.03.1975ல் விடுதலைப்பத்திரம் எழுதிக்கொடுத்த விவரம் எனக்குத்தெரியுமா என்றால் அவ்வாறு பத்திரம் எதுவும் எழுதித்தரவில்லை.என்னிடம் காட்டப்படும் பத்திரம்தான் மேற்படி விடுதலைப்பத்திரம் என்றால் அது போலியான ஆவணம்.

6. மேற்படி விடுதலைப்பத்திரத்தின்படி முத்துச்சாமி தேவரின் வாரிசுகளுக்குள் மேற்படி கிணறில் பொதுக்கிணறாக வைத்து முத்துச்சாமித்தேவரின் அனைத்துச்சொத்துக்களுக்கும் பாசனம் செய்து கொள்வதாக ஒப்புக்கொண்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. எனது வழக்குரையிலும், சட்ட அறிவிப்பிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் கடந்த 22.08.2022ம் தேதி பிரதிவாதியும் அவரது அடியாட்களும் நான் வழக்குச்சொத்தை சுத்தம் செய்த பொழுது வழக்குச்சொத்திற்குள் நுழைந்து என்னைத்தடுத்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி தேதியில் பிரதிவாதியுடன் யார் யார் வந்தார்கள்

என்றும் எந்த நேரத்தில் வந்தார்கள் என்றும், குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

7. மேற்படி தேதியில் பிரதிவாதியும் அவரது அடியாட்களையும் அருகில் உள்ள நபர்கள் சத்தம் போட்டதால் பிரதிவாதி சென்றுவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றாலும் யார் யார் பிரதிவாதியை சத்தம்போட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி வழக்குச்சொத்தில் இடையூறு செய்தது சம்பந்தமாக புகைப்படங்களோ, வீடியோவோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் 22.08.2022 ம் தேதி எனது சொத்தில் பிரதிவாதி எந்த இடையூறும் செய்யவில்லை என்றாலும் பிரதிவாதியின் சொத்தை அபகரிப்பதற்காக இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

8. 22.08.2022 ம் தேதி பிரதிவாதி இடையூறு செய்ததாக போலிசாரிடம் புகார் கொடுத்தேனா என்றால் எனது அம்மா புகார் கொடுத்தார். 22.08.2022 ம் தேதி நான் பணியில் இருந்தேன் என்றால் சரிதான். மேற்படி எனது தாயாரின் புகாரை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. நான் சொல்வதுபோல் 22.08.2022 ம் தேதி பிரதிவாதி வழக்குச்சொத்தில் இடையூறு செய்யவில்லை என்றாலும், எனது தாயார் போலிசாரிடம் புகார் எதுவும் அளிக்கவில்லை என்றாலும் சரியல்ல. முத்துச்சாமி தேவரின் மற்ற வாரிசுகளையும் வழக்கில் சேர்த்தால்தான் தற்போதைய உண்மை நிலவரம் தெரியவரும் என்றால் சரியல்ல.

9. பிரதிவாதியின் சொத்து எனது சொத்துக்கு அடுத்தபடியாக உள்ளதால் அதற்குசெல்லும் நீர்ப்பாசனத்தை தடுத்து பிரதிவாதியின் சொத்தை அபகரிப்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது பங்குச்சொத்தின் நான் தனியாக கிணறு வெட்டிக்கொண்டேன் என்றால் சரிதான். பிரதிவாதியின் சொத்திற்கு பொதுக்கிணற்றைத்தவிர வேறு நீர்ப்பாசனம் இல்லை என்றால் சரிதான். நடக்காத சம்பவத்தை வைத்து வழக்கை தாக்கல் செய்துள்ளதால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல, தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/- M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி